# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2001/2 - 2017 ජනවාරි මස 09 වැනි සඳුදා - 2017.01.09

*2001/2 ஆம் இலக்கம் – 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 24/51* (iv)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.

நிமல் சிறிபால த சில்வா,
போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2017, சனவரி 04.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மோட்டார் வாகன (மோட்டார் முச்சக்கர வண்டி) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2 (1) வாடகைக்கு அல்லது வேறு வகையில் ஆட்களை ஏற்றிச் செல்லும் நோக்கத்திற்காக மோட்டார் முச்சக்கர வண்டியினைப் பயன்படுத்துகின்ற அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டியின் ஒவ்வோர் உரிமையாளரும் மோட்டார் முச்சக்கர வண்டியின் பயணிகளுடைய அறைக்குச் செல்லும் வலப்பக்க நுழைவாயில் பயணி ஒருவரால் உள்வருவதை அல்லது வெளிச்செல்வதைத் தடுப்பதற்காக பகுதியளவில் அல்லது முழுமையாக நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) (அ) மோட்டார் முச்சக்கர வண்டியொன்றின் சாரதி ஒருவர் மோட்டார் முச்சக்கர வண்டியின் வலப்பக்கத்தினால் ஏறி இறங்குவதன் மூலம் மோட்டார் முச்சக்கர வண்டிக்குள் உள்நுழைவதற்கோ அல்லது வெளிச்செல்வதற்கோ எவரேனும் பயணியை அனுமதித்தல் ஆகாது.

(ஆ) ஆளெவரும் மோட்டார் முச்சக்கர வண்டியின் வலப்பக்கத்தினால் ஏறி இறங்குவதன் மூலம் மோட்டார் முச்சக்கர வண்டிக்குள் உள்நுழைதலோ அல்லது வெளிச்செல்லுதலோ ஆகாது.

(3) இவ்வொழுங்குவிதியின் நோக்கத்திற்காக, பன்னிரெண்டு வயதிற்குட்பட்ட இரண்டு சிறுவர்கள் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கிடும் நோக்கத்திற்காக ஒரு பயணியாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

*3.* மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் உரிமையாளர் ஒருவர் :-

(அ) மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் எல்லா ஆசனங்களினதும் தாங்குகைகளும் குறித்த நிலையில் உறுதியாக இருத்தல் வேண்டும் எனவும் ஒவ்வோர் ஆசனத்தினதும் முன் வழியாக நேர்கோடு ஒன்றில் அளவிடப்பட்ட குறைந்தபட்சம் 382 மற்றும் 250 மில்லி மீற்றர்கள் முறையே ஒவ்வொரு வயதுவந்தவருக்கும் சிறுவருக்கும் அனுமதிக்கப்படுதல் வேண்டுமெனவும் ;

(ஆ) மோட்டார் முச்சக்கர வண்டியின் ஏதேனும் சாரதி ஆசனத்தின் முன்முடிவிடத்திற்கும் முன் முடிவிடத்தின் ஊடான செங்குத்தான பாதைக்கும் இடையிலான மிகக்குறைந்த தூரம் 300 மீல்லி மீற்றர்களை விட குறைவாக இருத்தலாகாது எனவும் ;

(இ) மோட்டார் முச்சக்கர வண்டியின் பயணி ஆசனங்களின் முன் முடிவிடத்திற்கு ஒரு முன் ஆசனத்தின் பின்தாங்கிக்கும் மிகக்கிட்டிய புள்ளியின் ஊடான செங்குத்தான பாதைக்கும் இடையிலான மிகக்குறைந்த தூரம் 230 மில்லி மீற்றர்களைவிட குறைவாக இருத்தலாகாது எனவும் ;

(ஈ) மோட்டார் முச்சக்கர வண்டிக்குப் பொருத்தப்பட்ட அடுத்தடுத்த இரு ஆசனங்களின் பின்தாங்கிகளுக்கு இடையிலான ஆகக்குறைந்த தெளிவான தூரம் 660 மில்லி மீற்றரைவிட குறைவாக இருத்தல் ஆகாது எனவும்; அத்துடன்

(உ) ஒன்றுக்கொன்று நேர் எதிரான ஆசனங்கள் மோட்டார் முச்சக்கரவண்டி ஒன்றிற்குப் பொருத்தப்படுதலாகாது எனவும்.

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*4.* மோட்டார் முச்சக்கர வண்டியின் சாரதி தவிர்ந்த வேறு ஆளெவரும் சாரதி அறையில் அல்லது சாரதியின் ஆசனத்தில் ஏற்றப்படுதலாகாது.

5. மோட்டார் முச்சக்கர வண்டியின் வேகவரையறை, 2012, யூன் மாதம் 22 ஆந் திகதிய 1763/26 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மோட்டார் வாகன (வேக வரையறை) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

*6.* மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் உரிமையாளர் அல்லது சாரதி ஆனவர் அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டி வீதியில் சென்று கொண்டிருக்கும் வேளையில் ஏதேனும் விளம்பரம், துண்டுப்பிரசுரம் அல்லது கைத்துண்டை விநியோகிப்பதற்கு எவரேனும் ஆளை அனுமதித்தலாகாது.

*7.* நகர்ந்து கொண்டிருக்கும் அல்லது தரித்து நிற்கும் மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் சாரதி ஏனைய வீதிப்பாவனையாளருக்கு இடைஞ்சலை அல்லது தொல்லையை ஏற்படுத்துமளவிற்கு ஒலியை வெளிப்படுத்தும் ஏதேனும் சாதனம் அல்லது கருவியைப் பயன்படுத்துதலாகாது அல்லது பயன்படுத்தப்படச் செய்வித்தல் ஆகாது. ஒலியானது மோட்டார் முச்சக்கர வண்டியினுள் அடக்கப்பட்டிருக்கின்றது எனவும், அதில் பயணிக்கின்றவர்கள் மட்டும் கேட்பதற்கென உட்கருதப்பட்டது எனவும் உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

*8. (1)* மோட்டார் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் அல்லது சாரதி ஆனவர் :-

(அ) எந்த வேகத்தில் மோட்டார் முச்சக்கர வண்டி செலுத்தப்படுகின்றதோ அந்த வேகத்தை மோட்டார் முச்சக்கர வண்டி சாரதிக்கு எல்லா நேரங்களிலும் தெளிவாகச் சுட்டிக் காட்டுவதற்கு அத்தகைய நிலை ஒன்றில் மோட்டார் முச்சக்கர வண்டிக்கு கதிமானி பொருத்தப்பட்டிருக்கின்றது எனவும் ;

(ஆ) மோட்டார் முச்சக்கர வண்டியின் சாரதி மோட்டார் முச்சக்கர வண்டியின் முன்பக்கத்திற்கு தடையற்ற பார்வையைப் பெறக்கூடுமான அத்தகைய முறை ஒன்றின் மின்னியல் அல்லது இலத்திரனியல் தொழிற்பாட்டு வளித்திரைத்துடைப்பம் பொருத்தப்பட்டிருக்கின்றது எனவும் ;

(இ) வாயுவியக்கு வளையங்கள் பொருத்தப்பட்ட மோட்டார் முச்சக்கர வண்டி ஒவ்வொன்றும் வீதியில் பயன்படுத்தப்படுகின்ற சமயத்தில் அது ஒரு சில்லுடன் அல்லது அச்சுடன் விரைவாகப் பொருத்தப்படக்கூடிய ஆற்றலைக் கொண்டதாகவிருக்கும் வகையில் குறைந்தபட்சம் ஒரு மாற்றுசில்லையும் வேறு உபாயங்களையும் கொண்டு செல்லுதல் வேண்டும். இரண்டு வேறுபட்ட அளவு வாயுவியக்கு வளையங்களுடன் பொருத்தப்பட்ட அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டி ஒவ்வொன்றும் அதே முறையில், ஒவ்வோர் அளவிலும் குறைந்தபட்சம் ஒரு மாற்று காற்றடித்த வளையத்தைக் கொண்டு செல்லுதல் வேண்டும் எனவும் அத்துடன்

(ஈ) வானிலை நிலைமைகளிலிருந்து சாரதியையும் பயணிகளையும் பாதுகாப்பதற்கு மறைப்பு பொருத்தப்படுதல் வேண்டுமெனவும்.

உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) மோட்டார் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் பின்வரும் ஆக்கக் கூறுகள் மோட்டார் முச்சக்கர வண்டிக்குப் பொருத்தப்படுகின்ற எனவும் அவை நல்ல தொழிற்படு நிலைமையில் உள்ளன எனவும் உறுதிப்படுத்தல் வேண்டும் :-

(அ) இரண்டு வெளிப்புறப்பின் பார்வைக்கண்ணாடிகளும் ஓர் உட்புறப்பார்வைக் கண்ணாடியும் ;

(ஆ) நேர் மற்றும் தாழ்ந்த ஒளிக்கற்றைகளுடன் கூடிய தலைமை விளக்குகள் மற்றும் காட்டி ;

(இ) பின்புற அல்லது நிறுத்துதல் விளக்கு ;

(ஈ) பக்கத் திசைக்காட்டி விளக்கு ;

(உ) பின்னகற்றல் விளக்கு ;

(ஊ) சாரதி அறை மற்றும் பயணிகள் அறைக்கான இரண்டு உட்புறவிளக்குகள் ;

(எ) தரிப்பிட விளக்குகள் ; அத்துடன்

(ஏ) குழல்.

9. மோட்டார் முச்சக்கர வண்டியானது கட்டணம் ஒன்றுக்காக அல்லது வெகுமதி ஒன்றுக்காக ஆட்கள் அல்லது பண்டங்களைக் கொண்டு செல்லும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றவிடத்து :-

(அ) மோட்டார் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் அல்லது சாரதி, மோட்டார் வாகனச் சட்டத்தின் 196 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தகுதிச் சான்றிதழினை வழங்குவதற்காக முதலாவது பதிவு செய்தலில் இருந்து இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர் ஆண்டுதோறும் மோட்டார் முச்சக்கர வண்டியினைப் பரிசோதிக்கப்படச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சான்றிதழை வழங்குவதற்காகப் பயனுறும் திகதியானது ஆணையாளர் தலைமையதிபதியினால் வெளிப்படுத்தப்படலும் வேண்டும் ;

(ஆ) பின்வரும் தகவல்கள் பயணிகளுக்குத் தெளிவாகத் தெரியக்கூடியளவிற்கு சாரதி ஆசனத்தின் பின்பக்கத்தில் வெளிக்காட்டி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(i) பதிவு இலக்கம் ;

(ii) சாரதியின் பெயரும் சாரதி உரிம இலக்கமும் ;

(iii) சாரதியின் புகைப்படம் ஒன்று (அளவு : 65X50 மில்லி மீற்றர்கள்) ;

(iv) அவசரகால நிலைமையில் அறிவிப்பதற்காக வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ள முறையான பொலிஸ் நிலையங்களின் தொலைபேசி இலக்கங்கள்.

(இ) மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் சாரதி அவர் கடமையிலிருக்கும் எல்லா நேரங்களிலும் :-

(i) மரியாதையான மற்றும் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளுதல் வேண்டும் ;

(ii) புகைத்தல் ஆகாது ;

(iii) வாடகைக்கு அமர்த்தியவரால் அவர் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் வாடகைக்கு அமர்த்துதலை முடிவுறுத்தலாகாது ; அத்துடன்

(iv) பயணிகளினால் வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி மிகக் குறைந்த நேரத்தினுள் மிகக்கிட்டிய சாத்தியமான மார்க்கம் மூலம் அவர்களது சேரிடங்களிற்கு அவர்களை ஏற்றிச் செல்லுதல் வேண்டும்.

10. (1) வாடகைக்காக அல்லது வேறுவகையாக ஆட்களை அல்லது பண்டங்களை இடம் பெயர்க்கும் நோக்கத்திற்காக மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றினைப் பயன்படுத்துகின்ற உரிமையாளர் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் தொழிற்படவேண்டிய முச்சக்கர வண்டி மானியைப் பொருத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய கட்டணக்கொடுப்பனவின் மேல், அப்பயன்பட பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டிச் சாரதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு ஆனது பயணித்த தூரம், வாகனப்பதிவிலக்கம், அறவிடப்பட்ட தொகை மற்றும் பற்றுச்சீட்டுத் திகதியை உள்ளடக்குதல் வேண்டும்.

11. மோட்டார் முச்சக்கர வண்டியின் சாரதி, ஒவ்வொரு பயணத்தையும் பூர்த்தி செய்வதன் மேல் எவரேனும் பயணியினால் தற்செயலாக அதில் விட்டுச் செல்லப்பட்ட ஏதேனும் பொருளுக்காக மோட்டார் முச்சக்கர வண்டியைத் தேடிப்பார்த்தல் வேண்டும். ஏதேனும் பொருள் கண்டுபிடிக்கப்பட்டால், அது உரிமையாளரினால் உடனடியாக உரிமைகோரப்படாவிடின், சாரதி காலதாமதமின்றி அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அதை எடுத்துச் சென்று, அத்தகைய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியிடம் அதை ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பொருள் பெறப்பட்டதென்பனை ஒப்புறுதி செய்தலும் வேண்டும்.

12. மோட்டார் முச்சக்கரவண்டி ஒன்றின் உரிமையாளர் ஒருவர் மோட்டார் முச்சக்கர வண்டியின் உற்பத்தியாளரினால் அதன் மீது அடையாளமிடப்பட்ட விவரணமான தகவல் தவிர, எழுத்துக்கள், எண்கள், அல்லது இலக்கங்கள் எதையும் மோட்டார் முச்சக்கர வண்டியின் முன்புறத்தின் மீதும் பின்புறத்தின் மீதும் அடையாளமிடப்படவில்லை என உறுதிப்படுத்துதல் வேண்டும்.

13. 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மோட்டார் வாகன (மோட்டார் முச்சக்கரவண்டி) ஒழுங்குவிதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

14. இவ்வொழுங்குவிதிகளில் "மோட்டார் முச்சக்கரவண்டி" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1- 727

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.